இயலிசை

தனி பிரதி விலை 50 காசுகள்

ஆண்டு சந்தா	ரூ. 10/-
அரையாண்டு சந்தா	ரூ. 5/-

சிறப்பாசிரியர் :
சிதம்பரம் S மீனாட்சிசுந்தரம்

துணை ஆசிரியர் :
V. தமிழ்ராசன்

'இயலிசை'
57, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24

மலர் 1 | 15-5-82 இசைக்கலை உலக தமிழ் மாதமிருமுறை | இதழ் 2, 3

ரசிகப்பெருமக்களே ! கலைஞர்களே !

வணக்கம். இயலிசை முதல் இதழுக்கு ஓரளவு வரவேற்பு கிடைத்துள்ளது. நாங்கள் பெரிதாக எதிர்பாராததால் அதுவே எங்களுக்கு உற்சாகத்தை அளிக்கின்றது. மாதமிருமுறை வர வேண்டிய இதழ் வழக்கமான பத்திரிகை உலகக் காரணங்களால் ஒரு முறையாக வெளி வந்துள்ளது. விரைவில் சரிவர வெளிவர வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கின்றோம் நீங்களும் ஒத்துழைப்பு தர வேண்டுகின்றோம்.

வாழ்த்துக்கள் பல வந்துள்ளன, பலர் சந்தா அனுப்பியுள்ளனர். சிலர் நேரில் ஆசிகள் வழங்கினர். சில இசைச் சபைகள், திருக்கோயில்கள், இசைத்தட்டு நிறுவனங்கள் எங்கள் வேண்டுகோள் ஏற்று செய்திகள் அனுப்பினர் அனைவருக்கும் எங்கள் நன்றி. மற்ற இடங்களிலிருந்து செய்திகள் அனுப்ப வேண்டுகின்றோம்.

சிலருக்கு பத்திரிக்கை தொடர்ந்து நடக்குமா என்ற ஐயப்பாடு இருக்கலாம்; சந்தா அனுப்பத் தயங்கலாம், ஆரம்பத்தில் நாங்கள் அறிவித்தது போல் இது இலாப நோக்கில் ஆரம்பித்த இதழ் அல்ல. தொடர்ந்து வெளிவர அறக்கட்டளை போன்ற ஏற்பாடுகளைச் செய்ய உள்ளோம், இதற்கு வசதிபடைத்த சிலர் உதவ முன் வந்துள்ளனர். எனினும் ரசிகர்கள், கலைஞர்கள், சபைகள் ஆர்வத்தைப் பொருத்துத்தான் அவர்கள் உதவுவார்கள். ஊர் கோவில் உற்சவத்தில் சகல செலவும் என்று தனவந்தர் ஒருவர் நல்ல கச்சேரி ஏற்பாடு செய்தும் ஊர்மக்கள் ரசிக்க வரவில்லையென்றால் என்ன பலன்.

இசை நடனம் சம்பந்தப்பட்ட கதை, கட்டுரைகள் எழுதி அனுப்புங்கள். கலைஞர்கள், வாழ்வில் கலை நிகழ்ச்சிகளில் நடைபெற்ற சுவையான சம்பவங்கள் எழுதி அனுப்புங்கள். பிரசுரிக்கின்றோம். விரைவில் இசை நடனம் இவற்றை மையமாக வைத்து தொடர்கதை ஒன்று இயலிசையில் வெளிவர உள்ளது, கேள்வி பதில் பகுதிக்கு போதிய கேள்விகள் வரவில்லை, வந்ததும் ஆரம்பிக்க உள்ளோம். இசைக் கல்லூரி மாணவர்கள் பலருக்கு இயலிசை விபரம் தெரியவில்லை இசையாசிரியர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இளம் தமிழ் கலைஞர்களே! உங்களை யாரேனும் வந்து பாராட்டி வளர்த்து விடுவார்கள் என்று எதிர்பார்த்து காலத்தை வீணாக்காதீர்கள் 'இருந்து கெட்டான் வித்வான்' என்பது இசை உலக பழமொழி. நம்மை நாம் தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இயலிசையும் ஓர் சாதனம், உங்களைப் பற்றிய விவரங்கள் தாருங்கள். பிரசுரிக்கின்றோம்.

சுருக்கமாகச் சொன்னால் இது உங்கள் பத்திரிக்கை இதனைத் தயக்கம் இல்லாமல் நீங்கள் ஆதரிக்கலாம்; பயன்படுத்திக் கொள்ளலாம்,

சமீபத்தில் ஒரு சங்கீத வித்வானைக் கண்டு உரையாடும் பொழுது அவர், "இன்று என்ன பாடுகின்றான் என்று உலகம் பார்ப்பதில்லை; எவன் பாடுகின்றான் என்றுதான் பார்க்கின்றார்கள்" என்று கூறி வருத்தப்பட்டார்.

'இயலிசை' பொறுத்தவரை ரசிகப் பெருமக்கள், கலைஞர்கள், கலை நிறுவனங்கள் அப்படி பாராது ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

முகவர்கள் (ஏஜண்டுகள்) தேவை

இயலிசைக்கு சகல இடங்களிலும் முகவர்கள் தேவை. இசையார்வம் உடையவர்களும், ஏற்கெனவே ஏஜண்டுகளாக இருப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

இயலிசை விளம்பரக் கட்டணம்

முழு பக்கம்	ரூ. 300/-
அரை பக்கம்	ரூ. 150/-
கால் பக்கம்	ரூ. 75/-
குறைந்தளவு	ரூ. 50/-

அரியக்குடி இராமானுஜ அய்யங்கார் கச்சேரி

இசைச்சுட்டியாக வெளியீடு

திரு. T. R. விசுவநாதன் அவர்களின் 'எக்கோ' கம்பெனியார் காலஞ் சென்ற சங்கீத வித்வான் அரியக்குடி இராமானுஜ அய்யங்காரின் கச்சேரிகளில் இருந்து தொகுத்து இசைச்சுட்டி (காசட்) ஒன்று வெளியிட்டுள்ளனர் இவர்கள் சமீபத்தில் நாதசுரம் T. N. இராசரத்னம் பிள்ளைக் கச்சேரி இசைச்சுட்டி வெளியிட்டவர்கள். இசைச்சுட்டி விற்பனையாளர்களிடம் கம்பெனி விலாசத்திலும் இவைகள் கிடைக்கும். 15, மசூதித் தெரு, மயிலை, சென்னையில் தற்பொழுது கம்பெனி இயங்குகின்றது.

திருவேற்காட்டில் கலை நிகழ்ச்சிகள்

சித்திரைப் பௌர்ணமி லட்சார்ச்சனை விழா

சென்னை அருகில் உள்ள திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோவிலில் சித்திரைப் பௌர்ணமி லட்சார்ச்சனை விழா மே 4 முதல் 8-00 வரை நடைபெற்றது. தினமும் கலை நிகழ்ச்சிகளும் மாலையில் சிறப்பாக நடைபெற்றன திருமதி இராதாகிருஷ்ணமூர்த்தி திரு ஜி. முத்துராசா திரு. A. M. ராஜா, ஜிக்கி, திரு T. K. S. கலைவாணன் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இலங்கை உலக இந்து சமய மாநாட்டில் கலைநிகழ்ச்சிகள் தமிழகக் கலைஞர்கள் நடத்தினர்

இலங்கை நாட்டின் தலைநகரான கொழும்புவில் கடந்த ஏப்ரல் 21 முதல் 25 தேதிவரை உலக இந்து சமய மாநாடு நடைபெற்றது. தமிழகத்தில் இருந்து மடங்கள், ஆதினங்கள் தலைவர்கள் சமய சொற்பொழிவாளர்கள், கலைஞர்கள், பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். தமிழகத்திலிருந்து கீழ்கண்ட கலைஞர்கள் கலந்து கலை விருந்து அளித்தனர். கலை நிகழ்ச்சிக்கு ஏராள இலங்கை ரசிகர்கள் திரளாக வந்து ரசித்தனர். இலங்கை வானொலி கச்சேரிகளையும், சொற்பொழிவுகளையும் ஒலிபரப்பியது. நடன நிகழ்ச்சிகளை இலங்கை TV ரூபவாஹினி ஒளிபரப்பியது.

இசைக்கலைஞர்கள் :
சீர்காழி கோவிந்தராசன்
சூலமங்கலம் சகோதரிகள்
சிதம்பரம் S. மீனாட்சி சுந்தரம்
நாதசுரம் : நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்
திருமுறை இசை :
முத்து கந்தசாமி தேசிகர்
ஞானப்பிரகாசம்
சானகி சுவாமிநாதன்
சமய சொற்பொழிவாளர்கள் :
திரு முருக கிருபானந்தவாரியார்
புலவர் கீரன்
கி. வா. ஜெகந்நாதன்
N. R. முருகவேள்
சௌந்திரம் கைலாசம்
நடனம் :
பத்மா சுப்ரமணியம்
சுவர்ணமுகி

இசை இயக்குநர் இளையராஜா பாடகி திருமதி M. L. வசந்தகுமாரி இவர்களும் கலந்து கொள்வதாக நிகழ்ச்சிகள் இருந்தன ஆனால் அவர்கள் வரவில்லை.

சென்னையில் இசைக் கலைஞர்கள் அதிகம் வாழும் பகுதி மயிலாப்பூர், இப்பகுதிக்கு இயலிசையின் தொடர்பாளராக பணியாற்ற குத்தாலம் திரு P. மீனாட்சிசுந்தரம் இசைந்துள்ளார். இவர் இசைக் குடும்பத்தில் வந்தவர். 'முத்தமிழ்ப் பேரவை' என்ற சபைக்கு பல ஆண்டுகளாக நிர்வாகப் பொறுப்பில் இருந்து பணியாற்றி வருபவர். இயலிசைக்கு செய்திகள், சந்தா, விளம்பரம் முதலியன இவர் மூலம் தர வேண்டுகின்றோம்.

இவரது முகவரி ;
G8, சிவராமன் தெரு,
செயின்ட் மேரீஸ் சாலை,
மந்தவெளி, சென்னை-28

இசைச்சுருளா? இசைச் சுட்டியா?

சென்ற இயலிசை இதழில் விளம்பரம் ஒன்றில் காசட் வெளியீட்டு விழாவிற்கு இசைச்சுட்டி வெளியீட்டு விழா என பிரசுரிக்கப்பட்டு காசட் என்ற ஆங்கில வார்த்தைக்கு இசைச் சுட்டி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைப் பற்றி சில வாசகர்கள் ஆதரித்தும் சிலர் இசைச் சுருள் என்பதே சரி எனவும் கடிதங்கள் எழுதியுள்ளனர். இந்த இசைச்சுட்டி என்ற வார்த்தை பொருத்தமாக இருக்குமா என பல தமிழறிஞர்களிடம், கலந்தே பயன்படுத்தப்பட்டது. அவர்களில் சிலர் 'இசைச் சுருள்' என்ற வார்த்தை பயன்படுத்தலாம்; இருந்தாலும் பெரிய ஒலி நாடாவுக்கும் Spool Type Tape இந்த பெயர் பொருந்துவதால் இலக்கண ரீதியாக வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு என்ற முறையில் பாராது நடைமுறை வார்த்தை ஒன்றினைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தனர். சுட்டி என்றால் சிறியது. எனினும் அடக்கம் ஏராளம் என நடைமுறையில் அர்த்தங்கள் உள்ளன. எனவேதான் இவ்வார்த்தையினை அறிமுகம் செய்துள்ளோம்.

இசை உலகம் ஏற்க வேண்டுகிறோம்.

நடன ஆசிரியர் வழுவூராருக்கு வீணை பாலச்சந்தருக்கு பட்டங்கள் சேலம் தமிழ்ச்சங்கம் வழங்கியது

சேலம் தமிழ்ச் சங்கம் சமீபத்தில் விழா ஒன்று நடத்தி நடன மேதை வழுவூர் இராமையா பிள்ளைக்கும், வீணைக் கலைஞர் S. பாலச்சந்தருக்கும் 'முத்தமிழ் கலை மணி' என விருதுகள் வழங்கி ரூ 1000/- பரிசும் இருவருக்கும் வழங்கினர். இவற்றினை சட்டப்பேரவைத் தலைவர் க. இராசராம் முன்னிலையில் உயர்நீதிமன்ற நடுவர் மோகன் வழங்கினர். சங்கத் தலைவர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமை தாங்க கலைஞர்களைப் பாராட்டி மாவட்டக் ஆளுநர் S R. கருப்பண்ணன், முன்னாள் M.L.A., ஜெயராமன், கே. ஏ. பழனிச்சாமி முதலியோர் பேசினர். இருவருக்கும் இயலிசையின் வாழ்த்துகள்!

திரு மெய்ஞானத்தாரின் மகன் வழங்கிய நாதசுர இசை அமைந்தகரை ரசிகர்கள் ரசித்தனர்

காலஞ்சென்ற நாதசுர மேதை திருமெய்ஞானம் நடராஜசுந்தரம் அவர்களின் குமாரன் T. N. வேணுகோபால் நாதசுர கச்சேரிகளை அழகாக அடக்கமாக செய்து வருகின்றார். அவரது நாதசுர நிகழ்ச்சியை சென்னை அமைந்தகரை ஜெகத்ரட்சக தேவார திருப்புகழ் சபை தங்கள் 28-ம் ஆண்டு நிறைவு விழாவில் ஏற்பாடு செய்திருந்தனர். பின் இரவு ஆரம்பித்து அதிகாலை வரை ஏகாம்பரேசுவரர் தருவீதி உலாவுடன் வேணுகோபால் தக்க தவில் கலைஞர்களுடன் நாதசுரம் வாசித்தார். அமைந்தகரை ரசிகர்கள் காலஞ்சென்ற திருமெய்ஞானத்தார் நாதசுர இசையை விரும்பி கேட்பவர்கள். அவர்களுக்கு அவரது மகன் வாசிப்பும் மிகவும் உற்சாகம் ஊட்டுவதாக அமைந்திருந்தால் திரளாக வந்திருந்தனர். T. N. வேணுகோபாலனுக்கு நல்ல எதிர்காலம் அமைய இயலிசை வாழ்த்துகள்!

பத்து நாட்களாக நடைபெற்ற தேவார திருப்புகழ் சபை விழாவில் தருமபுரம் சுவாமிநாதன், T V. சுந்தரவல்லி, K வீரமணி ராதா, T. L. மகாராசன், L. R. ஈஸ்வரி, சீர்காழி கோவிந்தராசன் இவர்கள் கச்சேரிகளும், சுகிசிவம் சொற்பொழிவும் நிகழ்ந்தன.

அழகான இசை, அபத்தமான கதை

காதல் ஓவியம் வெறும் இசை ஓவியமே!

'ஒருதலை ராகம்' படத்தில் ஒரு கல்லூரி பாடகனை கதாநாயகனை அறிமுகப்படுத்தினார்கள். படம் வெற்றி கண்டது. பின்னர் 'இரயில் பயணங்களில்,' 'பயணங்கள் முடிவதில்லை' போன்ற பல படங்களில் கதாநாயகனை ஒரு பாடகனாக கதை அமைத்து படங்கள் எடுத்தனர், நன்றாக ஓடியது. எனவே திரையுலகில் இன்று பாடகர் பாத்திரங்களில் கதாநாயகர்களை அமைத்து படம் எடுப்பது ஒரு புது வழக்கம் FASHION ஆகிவிட்டது.

புதுமை புரட்சி இயக்குநர் பாரதிராஜாவையும் இது விடவில்லை. கோவிலில் பாடும் ஒரு குருட்டு பாடகனை வைத்து கதையமைத்து 'காதல் ஓவியம்' என்று ஒரு படம் எடுத்துள்ளார். ஏனோ அவரது கதாநாயகப் பாடகன் மனதில் நிற்கவில்லை, ஆனால் அவனை அழைத்து ஆதரிக்கும் செட்டியார் மனதில் நிற்கின்றார். செட்டியார் வரும் காட்சிகளில்தான் பாரதிராசா முத்திரைகள் தெரிகின்றது. சங்கராபரணம் படத்தில் வருவது போன்று சில நடன காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. இந்த காட்சிகளில் பாரதிராசா மாற்று குறைந்த தங்கம்தான்.

இளையராசா இசைதான் படத்தை ஓட்டுவது.

திருஞானசம்பந்தர் இசை விழா

திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும்

திருக்கழுக்குன்றம் அப்பர் தொண்டர் அணி, மற்றும் அடையாறு பண்பாட்டுக் கலை பயில் கழகம் இவர்கள் வரும் ஜூன் 11, 12, 13 தேதிகளில் திருக்கழுகுன்றம் நால்வர் பேட்டை திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா நடத்த உள்ளனர். மூன்று நாட்களிலும் தேவார ஓதுவார்கள் இசைக் கலைஞர்களின் திருமுறை இசையரங்கும், அறிஞர்கள் சொற்பொழிவுகளும் நிகழும். அமைச்சர்கள் உயர்நீதி மன்ற நீதிபதிகள் மற்றும் சைவ சமய தலைவர்கள் விழாவில் கலந்து கொள்வர்.

சேலம் S. ஜெயலட்சுமி பாடிய கந்தர் கலிவெண்பா இசைத்தட்டு

திருச்செந்தூரில் வெளியீடு

திருச்செந்தூர் முருகப் பெருமான் சந்நிதியில் 300 ஆண்டுகளுக்கு முன் குமர குருபரர் திருவாய் மலர்ந்தருளிய கந்தர் கலிவெண்பாவினை நீண்ட இசைத்தட்டு (LP) வடிவில் கொண்டு வந்துள்ளனர். HMV கிரமபோன் கம்பெனி. பாடியவர் கலைமாமணி டாக்டர் சேலம் S ஜெயலட்சுமி பொருள் உதவி வழங்கியருளியவர் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமார சுவாமித் தம்பிரான் அவர்கள் இந்த இசைத்தட்டினை திருச்செந்தூரில் திருமுருகன் கோவில் கலை அரங்கில் காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் குலபதி APC வீரபாகு அவர்கள் வெளியிட்டார்கள்.

தொடர்ந்து டாக்டர் சேலம் S. ஜெயலட்சுமி அவர்கள் இன்னிசை அரங்கும் நடைபெற்றது

'திரு அருட்பா தேனிசை' இசைச்சுட்டி

சென்னை கந்தகோட்டத்தில் வெளியீடு

வள்ளலார் இராமலிங்க அடிகள் பாடிய திரு அருட்பா பாடல்களிலிருந்து 11 பாடல்களை எடுத்து இசையமைத்து அவரது உருவ மூவர்ண முகப்புடன் இசைச் சுட்டியாக (காசட்) வெளியிட்டுள்ளனர் 'மீடியா' என்ற இசைத்தட்டு, இசைச் சுட்டி நிறுவனத்தினர். திரை இசை இலக்குநர் ஸ்ரீகுமார் இதற்கு இசையமைக்க சிதம்பரம் S. மீனாட்சி சுந்தரம் பாடியுள்ளார்.

இசைத்தட்டில் பலர் ஒன்றிரண்டு அருட்பா பாடல்களை பாடியுள்ளனர். தெய்வ மணி மாலை பகுதி முழுவதும் சீர்காழியார் இசைத்தட்டில் பாடி வெளிவந்துள்ளது. திரு அருட்பா திரட்டாக வந்த முதல் இசைச்சுட்டி இதுவே. இதில் வள்ளலாரைப் பற்றி காலஞ்சென்ற இசைத்தமிழ்க் கவிஞர் சிதம்பரம் நடராச சுந்தரம் பாடிய 'பாடிஞர் இராமலிங்கம்' என்ற பாடலும் சேர்க்கப்பட்டுள்ளது. இசையமைப்பில் இசைக்கருவிகள் அதிகமாக பயன்படுத்தாமல் மிதமாகப் பயன் படுத்தப்பட்டு பாடல்களுக்கே முதன்மை இடம் கொடுத்திருப்பது பாராட்ட வேண்டியதாகும். சன்மார்க்க அன்பர்கள், சங்கங்கள் அனைவரும் வாங்கி பயன் படுத்திக் கொள்ளலாம். இசைச் சுட்டி விற்பனையாளர்களிடம் கிடைக்கும். கம்பெனி விலை ரூ. 30/-

மதுரை தமிழ் இசைச்சங்க விழா

அரசர் முத்தையா செட்டியார் வருகை

தமிழ்ச் சங்கங்கள் வளர்ந்த மதுரை மாநகரில் பல ஆண்டுகளாக தமிழ் இசை விழாவினை நடத்தி தமிழிசைத் தொண்டாற்றி வரும் தமிழ் இசைச் சங்க 8 வது ஆண்டு விழா கடந்த 6-5-82 முதல் 12-5-82 வரை மதுரை ராசா சர் முத்தையா மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவினை அரசர் முத்தையா செட்டியார் குத்து விளக்கு ஏற்றி வைக்க சிவந்தி ஆதித்தன் துவக்கி வைத்தார். தமிழக நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைமையுரையாற்றினார். விழா மலரை மதுரை மாவட்ட ஆளுனர் ஆளுடைய பிள்ளை வெளியிட மேயர் எஸ். கே. பாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார். தொடக்கத்தில் சங்கத்தலைவர் அழகு சுந்தரம் செட்டியார் அனைவரையும் வரவேற்க, பின்னர் நன்றியுரை சங்க செயலாளர் மாணிக்கம் செட்டியார் ஆற்றினார். இசை விழாவில் கே. ஏ. சண்முக சுந்தரம் நாதசுரம், வலையபட்டி தவிலுடன் குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் கச்சேரி, மதுரை சோமசுந்தரம், சேலம் ஜெயலட்சுமி இவர்கள் கச்சேரிகள், குமாரிகள் சுவர்ணமுகி, ஜெயந்தி இராமானுஜம், கலா நரசிம்மன் பரத நாட்டியம் மற்றும் பல தேவார ஓதுவார்கள் இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

பரத நாட்டிய ஆராய்ச்சி நடத்துவேன்

அலர்மேல் வள்ளி அறிவிப்பு

பிரபல நடனக் கலைஞர் அலர்மேல் வள்ளி கலைமாமணி பட்டம் பெற்றவர், பலமுறை வெளிநாடுகள் சென்று பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தியவர். சமீபத்தில் லண்டன், ரோம் வியன்னா முதலிய இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்தி அந்நாட்டு மக்களின் பாராட்டுதலைப் பெற்றார். இவர் பத்திரிக்கை நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் விரைவில் தான் பரத நாட்டிய ஆராய்ச்சி செய்ய இருப்பதாக அறிவித்தார்.

பத்மா சுப்ரமணியம் ஆராய்ச்சி செய்கிறேன் என்று தவறான கருத்து ஒன்று சொல்லி கலை உலகில் வாங்கிக் கட்டிக் கொண்டதனையும், இவர்கள் கருத்தில் கொண்டு ஆராய்ச்சி செய்தால் நலமே.

வளர்க அவர் ஆர்வம்!

இராவண காவியம்

அகில உலக இந்து மகாநாட்டிற் பங்கு பற்றிய சைவ பேரறிஞர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது அவர்களை உபசரித்து வழங்கிய வரவேற்புரையின் பகுதி

இராவணன் இல்லாவிட்டால் "இராமாயணம்" என்ற சிறப்பு மிக்க காவியமே கிடைத்திருக்க முடியாது. இராவணன் பத்துத் திக்குகளிலும் தன் ஆட்சியைச் செலுத்திப் "பத்துத்தலை இராவணன்" என்ற புகழாரத்தைச் சூடிக்கொண்ட மன்னாதி மன்னன்; இசைவிற்பன்னன்; இசையின் மேலுள்ள அபிமானத்தினால் வீணை வாத்தியத்தைத் தன் நாட்டின் தேசியக் கொடியிற் பொறித்து இசையின் மகத்துவத்தை உலகறிய வைத்தவன். இவை யெல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஓர் அதி சிறந்த சிவ பக்தன். தனது தாய் சிவபூஜை செய்வதற்கு வசதியாக அவள் இருக்கும் இடத்துக்கு அந்தச் சிவபெருமானைக் கொண்டு செல்ல எண்ணி கைலைமலையைப் பெயர்க்கும் அளவுக்கு பக்தியும், வீரமும் ஒருங்கிணையப் பெற்ற மாபெரும் வீரன்.

இத்தனை சிறப்புக்களையும் பெற்ற அச் சைவமன்னனால் ஆளப்பட்ட இலங்கை நாட்டில் வாழ்கின்ற நாம் அவனது பரம்பரையைச் சேர்ந்த பழங்குடி மக்கள் எனக் கூறிக் கொள்வதிற் பெருமைப்படுகிறோம்.

இத்தகைய பழம்பெரும் சைவப் பண்பாட்டின் இருப்பிடமான இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்கள் எல்லோரது சார்பிலும் குறிப்பாக சைவமும், தமிழும், தமிழ் இசையும் அன்றும் இன்றும் குன்றாது வளர்ந்து வரும் யாழ்ப்பாணத் திருநாட்டுப் பெருமக்கள் சார்பிலும் எமது பெருமைமிக்க மண்ணுக்கு வருகை தந்துள்ள அறிஞர் பெருமக்கள் எல்லோரையும் வருக! வருக! என மனமார வரவேற்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் தமிழிசை விழா

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் நடத்தியது

இலங்கையில் தமிழக தலைநகரான யாழ்ப்பாணத்தில் கடந்த சித்திரைத்திங்களில் 10 நாட்கள் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதின மடததில் 24 வது ஆண்டு தமிழ் இசைவிழாவினை அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் சிறப்பாக நடத்தியது. விழாவில் சங்கீத பூஷணம் திரு. அ. சோமசுந்தரம் அவர்களுக்கு 'இசையரசு' என பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தினர். இலங்கை இசைக் கலைஞர்கள் அனைவரும் விழாவில் கலந்து ஈழ ரசிகப் பெருமக்களுக்கு தமிழ் இசை விருந்தளித்தனர். அடுத்த ஆண்டு 1983ம் மன்றத்தின் வெள்ளி விழா இதனை சிறப்பாக கொண்டாட தமிழகக் கலைஞர்களையும் அழைக்க உள்ளார். மன்ற செயலாளர் திரு. சு. பால சிங்கம் வளர்க அவர்கள் ஆர்வம்!

புதிய இசையமைப்பாளர் இசையன்பன் வெளிநாடுகள் பயணம்

V. S. S. கிரியேஷன்ஸ் தயாரிக்கும் பாடும் பச்சைக்கிளி வண்ணப் படத்தின் மூலம் புதிய இசையமைப்பாளராக திரை உலகில் அறிமுகமானவர் இசையன்பன் அப்படத்தில் அவர் கர்நாடக இசையை மையமாக வைத்து இசையமைத்துள்ளார். மேலும் 40 தமிழ் கம்பைன்ஸாரின் '40 மைல் தூரம்' உட்பட சில படங்கள் இசையமைக்க உள்ளார் இவர் பிரபல திரைப் பாடகர்களுடன் பல முறை வெளிநாடுகள் சென்றவர் விரைவில் மேல் நாடுகளுக்கு திரு. ஜெயச்சந்திரன், மலையாள தமிழ் திரைப்பட பாடகருடன் செல்ல உள்ளார் அவருக்கு இயலிசையின் வாழ்த்துகள்!

அகில இந்திய நாடகப் போட்டி பரிசுகள் தமிழக அரசு ஊழியர்கள் பெற்றனர்

கடந்த ஜனவரி மாதம் ஆந்திர மாநில அரசின் ஆதரவில் ஐதராபாத், ரவிந்திரபாரதி பவனில் அகில இந்திய மாநில அரசு ஊழியர்கள் நாடகப் போட்டி நடைபெற்றது. இதில் தமிழக அரசு ஊழியர்கள் 'வேலியில்லாத பயிர்கள்' தழும்புகள் என்ற நாடகங்களை நடத்தி மூன்று பரிசுகளைப் பெற்றனர். சிறந்த உபநடிகைக்கான முதற்பரிசு சிறந்த கதைக்கான இரண்டாம் பரிசு, சிறந்த நடிகருக்கான மூன்றும் பரிசு இவைகளைப் பெற்று பெல்லாரி ராகவய்யா நூற்றாண்டு நினைவு சுழற் கேடயங்களைப் பெற்றனர் 'தழும்புகள்' நாடகத்தை எழுதி இயக்கம் செய்தவர் ஜீவா சண்முக வேலாயுதம். நடிகர்கள் ரவிராஜி, பரமசிவம், சிவப்பிரகாசம் வரதராசன், நாகராசன், டெல்லி கண்ணன், ரகோத்தமன், மணிவண்ணன் P S. V. இனியன் கலைமாமணி நாஞ்சில் நளினி, குமாரி விஜயா முதலியோர் நடித்தனர்.

இவர்களைப் பாராட்டி சென்னையில் நடந்த விழாவிற்கு இயல் இசை நாடக மன்ற செயலாளர் திரு. D V. நாராயணசாமி தலைமை வகித்தார்.

செய்தி அறநிலைய அமைச்சர் திரு R. M. வீரப்பன் பாராட்டி தஞ்சாவூர் தட்டுகள் வழங்கினர் மற்றும் செய்தி சுற்றுலாத் துறை அலுவலர் திரு. சுந்தரம் IAS, திரு. ப. பா. கிருஷ்ணசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

தமிழகத்திற்கு பெருமைத் தேடிதந்த நாடகக் தலைவர்களுக்கு இயலிசை வாழ்த்துகள்!

ஜப்பானில் உலக இசை விழா 1985ல் நடத்த ஏற்பாடுகள்

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் 1985-ம் ஆண்டு உலக நாடுகள் இசை விழா ஒன்று நடத்த உள்ளனர். அதற்கு இப்பொழுதிருந்தே உலகெங்கும் இருக்கும் பல கலைஞர்களைத் தொடர்பு கொண்டு விழாவினை எப்படி அமைக்கலாம் என திட்டமிடுகின்றனர். விபரங்களுக்கு சென்னையிலுள்ள ஜப்பான் அரசு தூதுவர் அலுவலகத்தில் விசாரிக்கவும்.

Published by M. Lakshmi, 57, South Sivan Koil Street, Kodambakkam, Madras-24 and Printed by T. Thirunavukkarasu at Jayalakshmi Art Printers, 29, Kavarai Street, Vadapalani, Madras-26

T.N./M.S./(S) 260

இசைக்கலை மணம் கமழ
'இயலிசை' வளர்க!
இசையின்பத் தமிழ் இதழ
இதழ் எழில் மலர்க!
[illegible] பரவட்டும் இயலிசைதான்!
[illegible] பெருகட்டும் இயலிசைதான்!
[illegible] எழுதுவோர், கற்பவர் வாழ்க! இயலிசை
[illegible] செழிப்புறச் செய்பவர் வாழ்க!

— கவிஞர் [illegible], மதுரை-2

இசைக் குடும்பத்தில்
பிறந்து
தமிழக முதல்வராக
இருந்து
இன்று தமிழ்த் தலைவராகத்
திகழும்

டாக்டர் கலைஞர்

அவர்களுக்கு

3-6-82 அன்று பிறந்தநாள்! அவரது தொண்டு தொடர இயலிசையின் வாழ்த்துக்கள்.

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோவில்

சென்னை — 26

வைகாசி விசாகப் பெருந்திருவிழா விடாயாற்றி [illegible]

இன்னிசை நிகழ்ச்சிகள்

திருவாளர்கள்

6-6-82 சீவபுரி T. R. [illegible] குழுவினர் நாதசுரம்
7-6-82 A. M. ராஜா [illegible] இன்னிசை
8-6-82 மதுரை S. சோமசுந்தரம் [illegible] ...
9-6-82 M. S. விசுவநாதன் ...
10-6-82 M. R. விஜயா ... ...
11-6-82 K. வீரமணி, சோமு & ராதா ... ...
12-6-82 T. L. மகாராஜன் ... ...
13-6-82 சங்கர் & கணேஷ் ... ...
14-6-82 குன்னக்குடி R. வைத்தியநாதன் ... வயலின்
15-6-82 சீர்காழி S. கோவிந்தராசன் ... இன்னிசை

இவ்விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாக அமைத்துள்ள அறங்காவலர் குழுத்தலைவர் திரு. R. இராமகிருஷ்ணபாபு M.A.B.L நிர்வாக அதிகாரி திரு. S. கோலப்பன், B. A. இவர்களுக்கு ரசிகப் பெருமக்கள் சார்பில் நன்றி!

மேற்கு மாம்பலம்

ஸ்ரீ பக்த சமாஜ 18ஆம் ஆண்டு விழா இசை நிகழ்ச்சிகள்

சென்னை மேற்கு மாம்பலத்தில் அருள்மிகு காசிவிசுவநாதர் ஆலய திடலில் ஸ்ரீ பக்த சமாஜ 18ம் ஆண்டு விழாவில் இசை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

29—5—82 திருச்சூர் V. ராமச்சந்திரன், ரவி, துரைகுழுவினர்
30—5—82 T. N. கிருஷ்ணன் ஸ்ரீராம் வயலின் இசை
31—5—82 T. V. சங்கரநாராயணன் குழுவினர்,
1—6—82 பம்பாய சகோதரிகள் குழுவினர்
2—6—82 B. V. ராமன், B. V. லட்சுமணன் குழுவினர்
3—6—82 மகாராசபுரம் சந்தானம்
4—6—82 D. K. ஜெயராமன்.

இயலிசை வாழ்க !

வந்துதி பிறந்த தமிழ்ப்புத் தாண்டில்
வந்தது 'இயலிசை' வளர்தமிழ் இதழாய்
முயற்சியில் தளரா மீனாட்சி சுந்தரம்
உயர்ந்த நண்பர் உள்ளத் துதித்த
நெடுநாள் ஆசை நிஜமாய் ஆனது
அடுத்து இவர்விடும் அனைத்து இதழ்களும்
கட்டுரை கவிதை கலைஞனுத் தாங்கிய
பெட்டகம் இதுவெனும் புகழினைக் பெற்றே
வாழ்க வாழ்கென வளர்தமிழ் இதழ்போல்

—ஏர்வாடி S. இராதாகிருஷ்ணன்

ரசிகர்கள் ரசனை . . .

● வாழ்த்துக்கள்! [illegible] அனுப்பியுள்ளேன்

- தேவார இசை [illegible] திருஞானசம்பந்தன்
திருப்பரங்குன்றம்

● 'இயலிசை' முதல் இதழ் நன்றாகவும் அழகாகவும் இருந்தது. இயலிசைக்கலைஞர்கள் பற்றி [illegible] நிகழ்ச்சிகள் குறித்தும் போதுமான தகவல்கள் [illegible]

[illegible] ராமன், சென்னை -1

● 15-4-82 அன்று வெளியிட்ட [illegible] இசையின் காலம் திருப்புகின்றது. பகுதியில் மதுரை T. N. சேஷகோபாலன் [illegible] பிரபல பாடகர் 'தோடி' எனும் பட [illegible] வெளியிட்டுள்ளீர்கள். அதுதவறு. அவர் நடிக்கும் ப[illegible] 'தோடிராகம்' குன்னக்குடி வைத்யநாதன் அவர்கள் [illegible] பிடத்தின் பெயரில் ராகம் என்பதனை விட்டு விட்டீர்கள். அடுத்த இதழில் திருத்தி வெளியிடவும்.

S. A. வைரமூர்த்தி
இன்ரிக்கோ இசைத்தட்டு நிறுவனம்
சென்னை -2

● முன்பு ஆனந்தவிகடன் நாரதர் சிறுபத்திரிகை 'நாரதர்' பத்திரிக்கைகளில் இம்மாதிரி சங்கீதத்தைப்பற்றிய விபரங்கள் வரும் சினிமா பற்றிய உயர்வான விமர்சனங்களும் வரும். தாங்கள் பழைய நாரதர் பத்திரிக்கைகளைப் பார்த்து அதுபோல் செய்திகளை வெளியிடலாம். தங்கள் முயற்சி வெற்றி பெற எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

M. குப்புசாமி, ஈரோடு

பாடகி மணி கிருஷ்ணசாமியின் புதிய இசைச்சுட்டி !

ஏ. வி. எம். வெளியீடு

திருப்பதி கோயில் ஆஸ்தானக் கலைஞர்மணி கிருஷ்ணசாமி 'தயா சதகம்' என்று இசைச்சுட்டி (காஸெட்) பாடியுள்ளார். இதன் 108 சுலோகங்களை 32 ராகங்களில் அமைத்துள்ளார் இதனை ஏ. வி. எம். நிறுவனம் தயாரித்து திருப்பதியில் வெளியிட்டது இசைச்சுட்டியை ஆந்திர அறநிலைய ஆணையர் பி. எஸ். இராசகோபால ராஜு வெளியிட கோவில் நிர்வாக அலுவலர் பி. வி. ஆர். கே. பிரசாத் பெற்றுக் கொண்டார்.

விழாவில் இசைச்சுட்டி சில பாடல்களை மணி கிருஷ்ணசாமி பாடினார். பேராசிரியர்கள் பலராம் ரெட்டி; டி. கே. கோபால்சாமி, எழுத்தாளர் சாவி, நடிகர் ரஜினி காந்தராவ் ஆகியோர் பேசினர்.

புதிய இசையமைப்பாளர் சிவாஜிராஜா !

ஸ்ரீ விஜயலட்சுமி கம்பைன்ஸ் என்ற பட நிறுவனம் 'இளமை ஒரு ராகம்'. என்ற படத்தின் ஆரம்ப விழாவினை சமீபத்தில் சேலம் மாவட்டம் ஆத்தூர் விநாயகர் கோவிலில் நடத்தினர். இப்படத்தை கவிஞர் கண்ணதாசன் மகன் கலைவாணன் இயக்க உள்ளார். இவர் நடிகரும் ஆவார். இப்படத்தில் புதிய இசையமைப்பாளராக சிவாஜிராஜா அறிமுகம் ஆகின்றார். அவருக்கு இயலிசையின் வாழ்த்துக்கள்!

பாடியே பாராள வந்தவர்! கேரளாவில் பாடகர் அமைச்சரானார்!

திரு P. J. ஜோசப் என்பவர் கேரள மாநிலத்தில் நல்ல பாடகர். இவர் கேரள காங்கிரசு-J என்ற கட்சியும் தலைவருமாவார் இவர் சமீபத்தில் நடந்த தேர்தலில் கேரளத்தில் தொடுபுழா என்ற இடத்தில் நின்று தொகுதி முழுவதும் இசை நிகழ்ச்சிகள் நடத்தியே பிரச்சாரம் செய்தார் இவரும் இவரது கட்சியைச் சேர்ந்த பலரும் வெற்றி பெற்றனர். தற்பொழுது புதிய அமைச்சரவையில் திரு ஜோசப் இடம் பெற்றுள்ளார். இவருக்கு இயலிசையின் வாழ்த்துக்கள்.